திருவாளர்கள் மு. அரங்கநாதன், நா. சுந்தரராஜ், வி. கே. கோதண்டராமன், சி. ஆறுமுகம், எம். ஏ. லத்தீப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண். 19-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றவனவாகக் கருதப் பெற்றன.

திரு. செ. சிவசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 19. பொது சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,84,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை **வழங்கப் பெற்றது.**

## (இ) கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண். 7. மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சு. பர்லன் : தலைவரவர்களே, பழைய சட்ட மன்ற விவாதங்களை மீண்டும் அச்சடிக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்ட—

" மானியக் கோரிக்கை எண். 7.—மாநில சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,63,000-ல் ரூ. 100 குன்றக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.